*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.18

# The Contribution of Akalankan to the Development of Sri Lankan Children's Songs

**Paskaran Suman**[1*], **Mailwaganam Lakshika Madushanthi**[2],
[1]Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
[2]Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
Email: majilmathusanthi@gmail.com
*Corresponding Author Email: sumanp@esn.ac.lk.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

## ABSTRACT

Akalankan is a prolific writer who has made significant contributions to the creative literary genres of poetry, drama, and short stories. He has also published numerous articles and books on literature, society, religion, history, and folklore. In addition, he is well known as a orator on literature and religion. As a writer deeply committed to literature and society, Akalankan has also demonstrated a keen interest in children's literature. As a result, he has published five collections of children's songs: Suttik Kuruvikal (2003), Chinnach Chittukkal (2005), Panthu Adippom (2010), Sirikka Vidungal (2010), and Chinnanj Siriya Siragugal (2012). These collections primarily deal with themes such as the natural environment, moral values, and didactic ideas. Against this background, the present study examines whether Akalankan's children's songs are distinguished by thematic richness and literary excellence. The primary objective of the study is to evaluate his contribution to the development of Sri Lankan children's songs. Based on the five collections of children's songs as secondary textual sources, the study employs descriptive, analytical, and comparative research approaches. The analysis reveals that themes related to nature, philosophy of life, moral instruction, and value education are prominently reflected in Akalankan's songs. Many of his nature-themed songs exhibit melodiousness, imaginative expression, poetic ornamentation, effective narration, and linguistic simplicity. These qualities have established his distinctive place in the field of Sri Lankan children's literature. However, the study also identifies certain limitations. Some songs present ideas that lie beyond the experiential world and cognitive maturity of children, while others convey perspectives that are inconsistent with contemporary social life. These constitute the principal findings of the study.

***KEYWORDS:*** *Sri Lanka, Akalankan, Children's Songs, Values.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

# ஈழத்துச் சிறுவர் பாடல் வளர்ச்சியில் அகளங்கனின் பங்களிப்பு

[1]**பாஸ்கரன் சுமன்**, தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[2]**மயில்வாகனம் லக்ஷிகா மதுசாந்தி,** தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச் சுருக்கம்**

கவிதை, நாடகம், சிறுகதை முதலான படைப்பிலக்கியத் துறைகளில் மிகுந்த ஆர்வத்தோடு இயங்குபவர் அகளங்கன். இலக்கியம், சமூகம், சமயம், வரலாறு, நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த கட்டுரையாக்கங்களையும் நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டுள்ளார். இலக்கிய, சமய சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார். இலக்கியத்தையும் சமூகத்தையும் நேசிக்கும் அகளங்கன், சிறுவர் இலக்கியத்தின்பாலும் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார். அதன் விளைவாக சுட்டிக் குருவிகள் (2003), சின்னச் சிட்டுக்கள் (2005), பந்து அடிப்போம் (2010), சிரிக்க விடுங்கள் (2010), சின்னஞ் சிறிய சிறகுகள் (2012) ஆகிய ஐந்து சிறுவர் பாடல் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அப்பாடல்கள் இயற்கைச் சூழல், விழுமிய கருத்துகள், அறிவுரைக் கருத்துகள் முதலானவை குறித்தனவாக உள்ளன. இந்நிலையில், அவரது சிறுவர் இலக்கியப் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு அப்பாடல்கள் பாடுபொருளிலும் இலக்கிய நயத்திலும் காத்திரமானவையாக விளங்குகின்றனவா என்னும் ஆய்வுப் பிரச்சினைகளை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தகு ஆய்வானது சிறுவர் பாடல் வளர்ச்சியில் அகளங்களின் பங்களிப்பினை மதிப்பிடுவதனை நோக்காகக் கொண்டுள்ளது. சிறுவர் பாடல் தொகுதிகள் ஐந்தினை அடிப்படையாகக் கொண்ட (இரண்டாம்நிலைத் தரவாகிய பிரதியை அடிப்படையாகக் கொண்ட) இவ்வாய்வு, விவரணம், பகுப்பாய்வு, ஒப்பீடு ஆகிய ஆய்வு அணுகுமுறைகளைக் கைக்கொள்கிறது. இயற்கை சார்ந்த விடயங்கள், வாழ்வியல் தத்துவம், அறிவுரைக் கருத்துகள், விழுமிய போதனை என்பன அவரது பாடல்களில் முனைப்பாகத் தென்படுகின்றன. இயற்கை குறித்து அகளங்கன் பாடிய பாடல்களிற் பல ஓசைநயம், கற்பனை நயம், அணிநயம், சிறந்த எடுத்துரைப்பு, மொழி எளிமை என்பன உடையனவாக விளங்குகின்றன. அப்பாடல்களே அவரை ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில் அடையாளங் காட்டுகின்றன. இருப்பினும், முன்னர் எடுத்துக்கூறியது போல சிறுவர்களின் அநுபவ எல்லைக்கும் அறிவுமுதிர்ச்சிக்கும் அப்பாற்பட்ட விடயங்களை எடுத்துரைத்தமை, சமகால சமூக வாழ்க்கையோடு முரண்படும் விடயங்களை எடுத்துக்கூறியமை முதலான குறைபாடுகளையும் அவதானிக்க முடிகிறது என்னும் ஆய்வு முடிவுகள் இவ்வாய்வின் மூலமாகப் பெறப்பட்டுள்ளன.

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

திறவுச் சொற்கள் : ஈழம், அகளங்கன், சிறுவர் பாடல், விழுமியம்.

**அறிமுகம்**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அகளங்கன் எனும் புனைபெயருக்குரிய படைப்பாளியாகிய நா. தர்மராஜாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது வன்னிவளவன், மதன் ஆகிய புனைபெயர்களிலும் தமது ஆக்கங்களை வெளியிட்ட போதிலும், அகளங்கன் எனும் புனைபெயரையே தொடர்ந்தும் கைக்கொண்டார். கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் தமது படைப்புகளைத் தமிழுலகுக்கு அளித்துள்ளார். அத்தோடு, இலக்கியம், சமூகம், சமயம், வரலாறு, நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த கட்டுரையாக்கங்களையும் நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டுள்ளார். இலக்கிய, சமய சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார். முற்றத்துக்கரடி எனும் சிறுகதைத் தொகுப்பும் அலைக்குமிழ், மலர்ந்தும் மலராத ஆகிய நாவல்களும் ஏராளமான நாடகங்களும் சிறுவர் பாடல்களும் இவரால் படைக்கப்பட்டுள்ளன. அகளங்கன் கவிதைகள் என்னும் தொகுப்பு அவரது கவியாளுமையை வெளிப்படுத்தி நிற்கிறது. அன்றில் பறவைகள் (1992), இலக்கிய நாடகங்கள் (1994), யாழ் தேவி, அனிச்சமலர், கூவாத குயில்கள் (2001) தர்மம் வெல்லும், ஞானப்பழம், ஆனை கட்டிய அரியாத்தை முதலான பல நாடகங்களை (வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள் உட்பட) எழுதியும் மேடையேற்றியும் உள்ளார். கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் - ஓர் ஆய்வு, பாரதியாரும் பாஞ்சாலி சபதமும், வன்னிப் பிரதேச வயற் பண்பாடு, இலக்கியச்சரம் முதலான நூல்கள் அவரது ஆய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்விதமாக பல்வேறு ஆளுமைகளைக் கொண்டு விளங்கிய அகளங்கன், சிறுவர் இலக்கிய ஆக்கத்திலும் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறுவர்களுக்கெனப் படைக்கப்படுகின்ற ஆக்கங்கள் அனைத்தும் சிறுவர் இலக்கியங்களாகக் கணிக்கப்படும். அவ்வகையில், சிறுவர் இலக்கிய வகைமைக்குள் சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், சிறுவர் நாவல்கள், சிறுவர் கதைப்பாடல்கள் என்பன உள்ளடங்கும். இவற்றுள் சிறுவர் பாடல்கள் சிறுவர்களுக்கு எளிதில் மகிழ்ச்சியூட்டக்கூடியதும் விரைவாகப் படிக்கக்கூடியதும் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதுமான இலக்கிய வகையாகும். தமிழ்நாட்டைப் போல் ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சிபெறவில்லை. இருப்பினும், வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், இ.நாகராஜன், அகிலேசசர்மா, வ.இராசையா, மா.பீதாம்பரம், ம.சண்முகலிங்கம், மு.செல்லையா, கல்வயல் வே.குமாரசாமி முதலானோர் ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை

நல்கியுள்ளனர். ஈழத்துச் சிறுவர் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் நோக்கில் தற்காலத்தில் பலர் எழுத முற்பட்டுள்ளனர். அவர்களில் அகளங்கனும் ஒருவராக விளங்குகிறார். சுட்டிக் குருவிகள் (2003), சின்னச் சிட்டுக்கள் (2005), பந்து அடிப்போம் (2010), சிரிக்க விடுங்கள் (2010), சின்னஞ் சிறிய சிறகுகள் (2012) ஆகிய ஐந்து சிறுவர் பாடல் தொகுப்புகளும் எங்கள் காடு எனும் சிறுவர் நாடகமும் அவரது சிறுவர் இலக்கிய ஈடுபாட்டுக்குச் சான்றுகளாகின்றன.

அகளங்கனின் சிறுவர் பாடல் தொகுதிகளில் பந்தடிப்போம், சிரிக்கவிடுங்கள், சின்னஞ்சிறிய சிறகுகள் ஆகிய தொகுதிகள் கவனிப்புக்குரியன. அத்தொகுதிகளில் உள்ள பாடல்கள் பொருளமைதியிலும் எடுத்துரைப்பின் அழகியலும் ஏனைய தொகுதிகளைக் காட்டிலும் மேனிற்கின்றன. 'பந்தடிப்போம்' என்ற தொகுப்பில் பச்சைக்கிளி, ஆமை, பந்தடிப்போம், தாயுள்ளம், அன்னம், காகம், நல்ல வார்த்தை, சின்னப் பறவைகள், மானுடம் நிலைக்கும், நிலா ஆகிய பத்துப் பாடல்கள் உள்ளன. 'சிரிக்க விடுங்கள்' என்ற தொகுப்பில் சின்னக் குயிலே, மனிதப் பண்பு, ஏமாற்று, சிரிக்க விடுங்கள், ஒற்றுமைப் பாட்டு, புள்ளிமான், பாரதி, அணிற் பிள்ளையாரே, சுத்தம் - சுகம், நட்சத்திரம் ஆகிய பத்துப் பாடல்கள் உள்ளன. 'சின்னஞ் சிறிய சிறகுகள்' என்ற தொகுப்பில் அம்புலி மாமா, கண்ணன், எண்கள், கன்றுக் குட்டி, பாட்டி, பசு, குயில், சொந்தம், சிட்டுக் குருவிகள், பழகிப் பார், ஒட்டகச்சிவிங்கி, கோழி, முழுநிலா, வரிக்குதிரை, ஊஞ்சல், தூக்கணாங்குருவி, ஆமை - தவளை, எறும்பு ஆகிய பதினெட்டுப் பாடல்கள் உள்ளன.

**சிறுவர் பாடல்களின் பேசுபொருள்**

அகளங்கனது சிறுவர் பாடல்கள் சிறுவர்களுக்கான வாழ்க்கைத் தத்துவம், விழுமிய போதனை, கல்வி சார்ந்த விடயங்கள், இயற்கைப் பொருள்கள் முதலானவற்றை எடுத்துரைக்கின்றன.

**இயற்கை**

சிறுவர் பாடல்கள் சிறுவரின் உலகினை மையங்கொண்டதாக விளங்க வேண்டும் (அவர்கள் கண்டு அநுபவிக்கும் விடயங்கள் பாடல்வெளிக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.) அதேவேளை கற்பனையைத் தூண்டவல்லனவாகவும் அமைதல் வேண்டும். இந்த இரண்டு தளங்களையும் படைப்பாளி மிகக் கவனமாக அணுகி படைப்பினை வெளிக்கொணர்தல் வேண்டும். சிறுவர்களிடத்தல் ஏற்படும் சிந்தனா மாற்றம் பெரும் தாக்கங்களைப் பின்னாளில் ஏற்படுத்தவல்லது. நேரான மாற்றங்களை நோக்கி உந்தத்தக்க விசையைப் பாடல்கள் வழங்க

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

வேண்டும். இப்பின்னணியில் இயற்கை சார்ந்த விடயங்களையும் அதனடியான கற்பனைகளையும் படைப்பாளிகள் வெளிப்படுத்துவதுண்டு.

அகளங்கள் குயில், மான், அணில், நட்சத்திரம், கிளி, ஆமை, அன்னம், காகம், நிலா முதலான இயற்கையின் அம்சங்கள் குறித்துப் பாடியுள்ளார். அவை சின்னக் குயிலே, புள்ளிமான், அணிற் பிள்ளையாரே, நட்சத்திரம், பச்சைக்கிளி, ஆமை, அன்னம், காகம், நிலா முதலான தலைப்புகளில் அமைந்த பாடல்களாக விரிந்துள்ளன. சின்னஞ் சிறிய சிறகுகள் என்னும் தொகுதியில் உள்ள இயற்கை சார்ந்த பாடல்கள் பொருட்செறிவிலும் கற்பனை நயத்திலும் ஓரளவு பின்தங்கியே நிற்கின்றன. ஏனைய தொகுதிகளில் உள்ள பாடல்கள் பொருட்செறிவில் மேனிற்கின்றன. பொருட்செறிவின்மைக்கும் எடுத்துரைப்பின் அழகியலின்மைக்கும் கீழ்வரும் பாடல் பகுதி சான்றாகும்:

பச்சைப் புல்லை நான் தருவேன்
பால் தருவாயா பசுவே - பசுவே
பால் தருவாயா
மிச்சப் பாலை எனக்குத் தந்தால்

நானும் குடிப்பேன் - பாலை
நானும் குடிப்பேன்
கன்றுக் குட்டி இடித்து முட்டிக்
குடிப்பதைப் பார்த்தேன் - பாலைக்

குடிப்பதைப் பார்த்தேன்
என்றும் என்னால் இடித்து முட்டிக்
குடிக்க ஏலாதே – பாலைக்
குடிக்க ஏலாதே

(சின்னஞ் சிறிய சிறகுகள், பக்.8)

பொருட்செறிவிலும் எடுத்துரைப்பின் அழகிலும் செழுமைபெற்ற இயற்கை சார்ந்த பாடலுக்கு எடுத்துக்காட்டாக புள்ளிமான் தலைப்பில் அமைந்த பின்வரும் பாடல் வழங்கப்படுகிறது :

புள்ளி மானைப் போலே நானும்
துள்ளி ஓடுவேனே – அதன்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

புள்ளிகளை ஒவ்வொன்றாக
எண்ணி மகிழுவேனே

பச்சைக் கிளிக்குப் பாடம் சொல்லி
கேள்வி கேட்பேனே அதை
பக்கு வமாய் அணைத் தெடுத்து
பழங் கொடுப்பேனே

குயிலை நானும் கூவிக் கூவிக்
கூப்பிடு வேனே – அந்தக்
குயிலைப் போட்டிக்கு அழைத்து நானும்
தோற் கடிப்பேனே

மயிலின் தோகை அழகில் நானும்
மகிழ்ந்து போவேனே – அந்த
மயிலைப் போல ஆட்டம் ஆடி
மகிழ்ச்சி கொள்வேனே

(சிரிக்க விடுங்கள், பக்.13)

**வாழ்க்கைத் தத்துவம்**

சிறுவர்களுக்குப் புரியக்கூடிய வகையில் வாழ்க்கை தொடர்பான தத்துவக் கருத்துக்களை அகளங்கன் எடுத்துரைத்துள்ளார். ஆமை, பந்தடிப்போம், காகம், சுத்தம் - சுகம் ஆகிய பாடல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. ஒற்றுமையாக வாழ்தல், எந்தச் சூழலிலும் வாழ்வதற்குத் தம்மைத் தகவமைத்துக்கொள்ளல், சுத்தம் பேணுதல் ஆகிய கருத்துக்களை உயரிய வாழ்வுக்குரிய தத்துவங்களாக முன்மொழிந்துள்ளார்.

தாம் பாடல்களினூடாக கூறும் நல்ல செயல்களைச் சிறுவர்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். சூழல்களுக்கேற்ப எப்படித் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் எந்தச் சூழலிலும் வாழப் பழக வேண்டும் என்ற செய்தியையும் 'ஆமை' என்ற தலைப்பில் அமைந்த பாடலில் குறிப்பிட்டுள்ளார். பாடலின் ஒரு பகுதி வருமாறு:

தண்ணீரிலும் நீந்தித் திரிவீர்
தரையி லேயும் ஊர்ந்து திரிவீர்

எண்ணிப் பார்த்தால் ஆச்சரியந்தான் - நாமும்
எங்கும் வாழப் பழக வேண்டும் தான்
(பந்தடிப்போம், பக்.5)

சண்டையிடாமல் அனைவரும் ஒன்றாக விளையாட வேண்டும் என்ற செய்தியை சிறுவர்கள் மனதில் பதிய வைக்கும் வண்ணம் 'பந்தடிப்போம்' பாடலை அமைத்துள்ளார்.

சண்டையின்றிச் சந்தோச மாய்ப்
பந்தடிப் போமே
சகலருமாய் ஒன்றாய்ச் சேர்ந்து
பந்தடிப் போமே
(பந்தடிப்போம், பக்.7)

'காகம்' என்ற பாடலில் காகத்தின் ஒற்றுமையைக் கூறி, அது போல் சிறுவர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கிறார். காகம் உணவைக் கண்டால் தனியாக உண்ணாமல் தன் இனத்தை அழைத்து ஒன்றாகவே சேர்ந்து உட்கொள்ளும். அதுபோலவே சிறுவர்களும் பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற கருத்தை அறிவுரையின் ஊடான தத்துவமாகவே கீழ்வரும் பகுதியில் அடையாளப்படுத்துகிறார்:

கா கா என்று கரைந்து இனத்தைக்
காகம் அழைக்குமே - அழைத்து
ஆகாரத்தை ஒன்றாய்ச் சேர்ந்து
அருந்தி மகிழுமே
(பந்தடிப்போம், பக்.13)

**அறிவுரைக் கருத்துகள்**

சிறுவர்கள் சிறந்த வழியில் பயணிக்க வேண்டும் என்பதற்காக சிறுவர் பாடல்களின் மூலம் அறிவுரையையும் சிறுவர் இலக்கியப் படைப்பாளிகள் வழங்குவதுண்டு. இலக்கியத்தில் போதனை இருத்தல் கூடாது என்ற இலக்கியக் கொள்கை சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் பொருந்தாத ஒன்று. சிறுவர் இலக்கியத்தில் போதனைக்கும் குறிப்பிடத்தக்க பங்குண்டு. ஆயின், அது நேரடிப் போதனையாக அமையாதிருத்தல் படைப்பாளியின் ஆளுமையைப் பொறுத்தது. நேரடிப் போதனையாக அமையாத படைப்புகளே சிறுவர்களின் விருப்புக்குரியதாக விளங்கும்É காலத்தால் நிலைத்து நிற்கும். சிறுவர் பாடலாக்கத்தில் ஈடுபட்ட அகளங்களும் சில பாடல்களில் சிறுவருக்குப் போதனை செய்வதனை அவதானிக்க முடிகிறது. ஒற்றுமைப் பாட்டு, சுத்தம் - சுகம்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

ஆகிய தலைப்பிலமைந்த பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

'ஒற்றுமைப் பாட்டு' என்ற பாடலில் எறும்பு போல சுறுசுறுப்பாகவும் இரும்பு போல உறுதியான மனவலிமையோடும் இருக்க வேண்டும் எனச் சிறுவர்க்குப் போதனை செய்கிறார்.

எறும்பு போல சுறுசுறுப்பாய்
என்றும் வாழப் பழகுவோம்
இரும்பு போல உறுதியான
இதயம் கொண்டு நிமிருவோம்
(சிரிக்க விடுங்கள், பக்.13)

இப்பாடலில் இறுதி இரு வரிகளில் அகளங்கன் வலியுறுத்த விழைந்த கருத்து மேலும் செறிவுடையதாக வளர்த்தெடுக்கப்பட்டிருப்பின் சிறப்புற அமைந்திருக்கும். தோல்வியில், துயர் சூழும் பொழுதில் மனவலிமை கொண்டிருக்க வேண்டும் என்றும் அந்த மனவலிமையோடு துயரில் இருந்து மீளெழ வேண்டும், தோல்விகளை வெற்றிகளாக மாற்றியமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பின் கருத்துச் செறிவுடையதாக அமைந்திருக்கும்.

'சிரிக்க விடுங்கள்' என்ற சிறுவர் பாடல் தொகுப்பில் உள்ள 'சுத்தம் - சுகம்' என்ற தலைப்பில் அமைந்த பாடலில் நாம் குடிக்கும் நீரைச் சுத்தமாக கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும், நாம் வாழும் வீட்டைச் சுத்தப்படுத்தி வைத்திருக்க வேண்டும், குப்பைகளைப் புதைக்க வேண்டும், கைகளைச் சுத்தமாகக் கழுவிக்கொள்ள வேண்டும் முதலான கருத்துகளைச் சிறுவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் அறிவுரைகளாக எடுத்துரைக்கிறார். எடுத்துக்காட்டாக பின்வரும் பாடல் பகுதியைக் குறிப்பிடலாம்:

குடிக்கும் நீரைச் சுத்தநீராய்க்
கொதிக்க வைத்துப் பருகுவோம்
குடியிருக்கும் வீட்டை என்றும்
கூட்டிச் சுத்தம் செய்குவோம்
(சிரிக்க விடுங்கள், பக்.19)

நாம் சுத்தமாக வாழ வேண்டும் என்றும் நாம் சுத்தமாக இருப்பதனால் நோயில்லாமல் வாழலாம் என்றும் சிறுவர்களுக்குப் போதனை செய்கிறார். அப்பாடலில்,

நோயில்லாமல் வாழ நாங்கள்
நூல்கள் கற்றும் பயனில்லை
(சிரிக்க விடுங்கள், பக்.21)

, | Copyright © Author(s)

என்று குறிப்பிடுவதன்மூலம், நோயில்லாமல் வாழ எவ்வளவு நூல்களைப் படித்தும் பயனில்லை என்ற கருத்தை முன்வைத்துள்ளமை பாராட்டத்தக்கது. நூல்களால் அறிவு வளரும். ஆயின், நோயற்ற வாழ்வுக்குச் சுத்தம் அவசியம் என்று அகளங்கன் எடுத்துரைத்துள்ளார். ஈழத்தில் வெளிவந்த சிறுவர் பாடல்களில் சுத்தம் குறித்து வெளிவந்த பாடலாக அகளங்கனின் மேற்படி பாடலே விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் கல்வியிலும் சிறந்து முன்னேற வேண்டும் என்ற வகையில் சிறுவர் பாடல்களில் கல்வி சார்ந்த விடயங்களையும் அகளங்கன் பதிவுசெய்துள்ளார். அறிவைத் தரும் நூல்களை நாம் படிக்க வேண்டும் என்றக் கருத்தை 'அன்னம்' என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். 'எண்கள்' என்ற தலைப்பிலமைந்த பாடலில் இலக்கங்களை அறிமுகப்படுத்துகிறார். பாடல்களைப் பாடும் போதே சிறுவர்கள் மனத்தில் இலக்கங்கள் பதியும் வண்ணம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல் பகுதி தரப்படுகின்றது:

ஒன்று இரண்டு மூன்று
ஓடிக் காலை ஊன்று
நான்கு ஐந்து ஆறு
நல்ல பழச் சாறு

(சின்னஞ் சிறிய சிட்டுக்கள், பக்.5)

இந்த அறிவுரைக் கருத்துகள் தவிர்த்து, சிறுவர்கள் சிறந்த வழியில் செல்ல வேண்டும், பகைவர்களது பேச்சை கேட்கக் கூடாது முதலான பல்வேறு கருத்துக்களைத் தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**விழுமிய போதனை**

அகளங்கன் தமது சிறுவர் பாடல்களில் சிறுவர்களிடத்தில் விழுமியத்தைக் கட்டியெழுப்பும் வகையில் சமூக சீர்திருத்த கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார். சமய, சாதி, வர்க்க அடிப்படையில் ஏற்றத் தாழ்வு பாராட்டாது சிறுவர்கள் வாழ வேண்டும் என்றும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றும் விழுமியத்தை எடுத்துரைக்கிறார். 'நல்ல வார்த்தை' என்ற பாடல் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு. 'மானுடம் நிலைக்கும்' என்ற தலைப்பில் அமைந்த பாடலில் ஏழைகள், செல்வந்தர்கள்; என்ற பிரிவு இல்லை, மனிதர்கள் எவரும் யாருக்கும் அடிமை இல்லை, மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் கிடையாது, நாம் எல்லோரும் சமமானவர்கள் முதலான கருத்துகளை சமூக சமத்துவ நோக்கில் சிறுவர்கள் மனத்தில் பதியவைக்க எத்தனிக்கின்றார். அதனைப் பின்வரும் பாடல் பகுதி மூலம் அவதானிக்கலாம் :

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

ஏழையும் செல்வனும்

யாவரும் மனிதரே

ஏற்றத்தாழ்வுகள் எமக்கில்லை

நாளைய உலகில் நாமெல்லோரும்

சமமென்றாகும் நிலை படைப்போம்

(பந்தடிப்போம், பக்.19)

ஏழை – செல்வன் என்ற கருத்தாக்கமும் சமயம் சார்ந்த கருத்துநிலைகளும் சிறுவர்களால் தம் வாழ்வியல் அநுபவத்தைக் கொண்டு கண்டறியக்கூடியனவே. ஆதலால், அத்தகு வேறுபாடுகள் அற்றிருத்தல் வேண்டும் எனப் போதனை செய்வது ஏற்புடைமையே. இருப்பினும்,

சாதி சமய ஏற்றத்தாழ்வுச்

சாக் கடையில் விழாதே

(பந்தடிப்போம், பக்.15)

ஏழை என்றும் அடிமை என்றும்

எவரையும் நீ எள்ளாதே

(பந்தடிப்போம், பக்.15)

என்றெல்லாம் 'நல்ல வார்த்தை' என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். சாதிய வேறுபாட்டைப் புரிந்துகொள்ளும் பக்குவமோ அத்தகைய வேறுபாடு பற்றிய அநுபவமோ சிறுவர்களுக்கு இருபத்தொராம் நூற்றாண்டு ஈழத்துச் சூழலில் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அவர்களது புழங்குவெளிகளாகப் பெரிதும் விளங்கும் பாடசாலை, தனியார் கல்விச் சாலைகள் இவ்விதமான வேறுபாடுகளுக்கு தற்போது இடமளிப்பதில்லை. காலமாறுதலால் சாதிய வேறுபாட்டை நுட்பமான சில இடங்களிலே அதுவும் வளர்ந்தோரின் அநுபவநிலைகளிலேதான் ஈழத்தில் அவதானிக்க முடிகிறது. நிலைமை இவ்விதம் இருக்க, படைப்பாளி சாதிய வேறுபாடு காட்டலாகாது என்று பாடுவது அத்துணை நியாயமானது கிடையாது. மாறாக, எதனையும் துருவி ஆராயும் சிறுவர்களிடத்தில் அவ்விடயம் தொடர்பான சிந்தனைக் கிளர்ச்சி ஏற்படுவதற்குப் படைப்பாளியே காரணர் ஆகிவிடும் துயரம் நடந்துவிடும். அவ்வாறே, சகல மதங்களையும் மதித்து நடக்க வேண்டும் என்று புகட்டுவதே பொருத்தமானது. அதனைவிடுத்து, சமய ஏற்றத்தாழ்வு காட்டுதல் ஆகாது என்று எடுத்துரைப்பது சிறுவர் உளநிலைக்குப் பொருத்தமற்றது. உடன்பாட்டால் எடுத்துரைக்கப்பட வேண்டிய அறம் எதிர்முகத்தால் எடுத்துரைக்கப்படுவது ஆபத்தானது. அவ்விதமே அடிமை என்ற விடயத்தைப் புரிந்துகொள்ளும் பக்குவமோ

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

அறிவுமுதிர்ச்சியோ சிறுவர்களுக்குக் கிடையாது. படைப்பாளியாகிய மூதறிவாளரின் மனநிலையில் நின்று, சிறுவர் பாடல்கள் எழுதப்பட்டமையின் விளைவு இது.

மேற்சொன்னவற்றைப் போன்றே பல்வேறு விமர்சனங்களைத் தாங்கிய பாடலாக 'சிரிக்க விடுங்கள்' என்ற பாடலும் அமைந்துவிடுகிறது. சிறுவர்களை அடிமைகளாக, வீட்டுக் கூலிகளாக பார்க்க வேண்டாம் என்பன போன்ற கருத்துகளைச் சிறுவரின் வேண்டுகோள்களாக முன்வைக்கிறார். பின்வரும் பகுதிகள் அவதானிக்கத்தக்கன:

அடிமை களாய் வீட்டுக் கூலி
ஆளாய் எம்மை அனுப்ப வேண்டாம்
அடித டிக்குள் எம்மைச் சேர்த்து
ஆயு தத்தால் அழிக்க வேண்டாம்

சாதி பேதச் சாக்கடைக்குள்
தள்ளி எம்மை வீழ்த்த வேண்டாம்
சமய பேதப் போர்க் களத்தில்
தலையுடைக்க அனுப்ப வேண்டாம்
(சிரிக்க விடுங்கள்:9)

இருபத்தொராம் நூற்றாண்டில் சிறுவர்கள் வீட்டுக் கூலிகளாக அனுப்பப்படுதல் சிறுவர் உரிமை மீறல் ஆகும். சட்டத்திற்கு முரணான விடயத்தைப் படைப்பிலக்கியம் மூலம் எடுத்துரைக்க விழைவது நியாயமற்றது. அதற்கும்மேல் இருபத்தொராம் நூற்றாண்டு இலங்கைச் சூழலில் சிறுவர்கள் வீட்டுக் கூலிகளாக அனுப்பப்பட்ட செய்தியானது எப்போதாவது அறியப்படும் செய்திகளில் ஒன்றேயாகும். விதிவிலக்கான விடயங்களைப் பொதுமையாக்கி, சிறுவர் பாடல்களில் எடுத்துரைப்பது சிறுவர் இலக்கிய படைப்பியல் கொள்கைக்கு முரணானது. அகளங்கன் கையாண்ட 'சாதி பேதச் சாக்கடை' என்ற உருவகம்கூட சிறுவர்களால் புரிந்துகொள்ளக் கடினமானதே.

**முடிவுரை**

கவிதை, சிறுகதை, நாவல் முதலான இலக்கிய வடிவங்களில் தமது படைப்புகளைத் தந்த அகளங்கனின் சிறுவர் இலக்கியத்தின்பாலும் ஈர்க்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக சிறுவர் பாடல்களைப் படைத்து வெளியிட்டுள்ளார். இயற்கை சார்ந்த விடயங்கள் (நிலா, வானம் , கிளி, மான், சிட்டுக் குருவி, அருவி, நட்சத்திரம், சூரியன் முதலியன), விழுமிய கருத்துகள், அறிவுரைக் கருத்துகள் முதலானவற்றைச் சிறுவர் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்விதமான

CC BY ,| Copyright © Author(s)

விடயங்களையே சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள் பொதுவாக உள்வாங்கிக்கொள்வர். இருப்பினும், அவ்விடயங்களை நோக்கும் விதமும் எடுத்துரைக்கும் விதமுமே அவர்களது இலக்கிய ஆளுமையினைத் தீர்மானிக்கின்றன.

வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், இ.நாகராஜன், அகிலேசசர்மா, வ.இராசையா முதலானோரது பாடல்களில் பொருளும் எடுத்துரைப்பும் அழகியலோடு பொருந்தி நிற்பதனாலேயே அவர்கள் ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில் தனித்துவமான கவனிப்புக்குரியவர்களாகினர். இயற்கை குறித்து அகளங்கன் பாடிய பாடல்களிற் பல ஓசைநயம், கற்பனை நயம், அணிநயம், சிறந்த எடுத்துரைப்பு, மொழி எளிமை என்பன உடையனவாக விளங்குகின்றன. அப்பாடல்களே அவரை ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில் அடையாளங் காட்டுகின்றன. இருப்பினும், முன்னர் எடுத்துக்கூறியது போல சிறுவர்களின் அநுபவ எல்லைக்கும் அறிவுமுதிர்ச்சிக்கும் அப்பாற்பட்ட விடயங்களை எடுத்துரைத்தமை, சமகால சமூக வாழ்க்கையோடு முரண்படும் விடயங்களை எடுத்துக்கூறியமை முதலான குறைபாடுகளையும் அவதானிக்க முடிகிறது. இவை போன்ற குறைபாடுகளைக் களைந்து, எடுத்துரைப்பின் அழகியலிலும் மேலும் கவனம் செலுத்துகையில் தமிழின் சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக வைத்தெண்ணப்படுவார்.

**உசாத்துணை நூற் பட்டியல்**

[1]. அகளங்கன் (2010). பந்தடிப்போம். பத்மம் பதிப்பகம். கொழும்பு.

[2]. அகளங்கன் (2010). சிரிக்க விடுங்கள். பத்மம் பதிப்பகம். கொழும்பு.

[3]. அகளங்கன் (2012). சின்னஞ் சிறிய சிறகுகள். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம். மட்டக்களப்பு.

[4]. அருளானந்தம், ச. (2019). ஈழத்தில் சிறுவர் இலக்கியம். அருள் வெளியீட்டகம். திருகோணமலை.

[5]. பவணந்தி, அ. ராசநாயகம், ஜ. (2015). இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியப் போதனை, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு.

[6]. மேகராசா, த. (2025). உளவியல் நோக்கில் ஈழத்துச் சிறுவர் இலக்கியம், பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம். மட்டக்களப்பு.

[7]. யோகராசா, செ. (தொ.ஆ). (2007). ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம். குமரன் புத்தக இல்லம். சென்னை.

[8]. யோகராசா, செ. (தொ.ஆ). (2007). ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம். குமரன் புத்தக

இல்லம். சென்னை.

[9]. ஜெயராசா, சபா. (2005). குழந்தை உளவியலும் கல்வியும். பூபாலசிங்கம் புத்தகசாலை. கொழும்பு.

## References

[1]. Akalankan. (2010). *Panṭatippōm.* Patmam Patippakam. Colombo.

[2]. Akalankan. (2010). *Sirikka Viṭuṅkaḷ.* Patmam Patippakam. Colombo.

[3]. Akalankan. (2012). *Ciṉṉañ Ciṟiya Ciṟakukaḷ.* Eḻuttāḷar Ūkkuvippu Maiyam. Maṭṭakkaḷappu.

[4]. Aruḷāṉantam, C. (2019). Children's Literature in Sri Lanka. Aruḷ Veḷiyīṭṭakam. Tirukōṇamalai.

[5]. Joharajh, C, (Ed.). (2007). Compendium of Sri Lankan Children's Literature. Kumaraṉ Book House. Ceṉṉai.

[6]. Joharajah, C. (Ed.). (2007). Collection of Sri Lankan Children's Songs. Kumaraṉ Book House. Ceṉṉai.

[7]. Joharajah, C. (2005). Child Psychology and Education. Pūpālaciṅkam Puttakacālai. Colombo.

[8]. Megarajah T. (2025). A Psychological Perspective on Sri Lankan Children's Literature. Paṭṭippaḷaip Pirateca Kalai Ilakkiya Camūka Apivirutti Oṉṟiyam. Maṭṭakkaḷappu.

[9]. Pavaṇanti, A., Racanayakam, J. (2015). Moral Instruction in Sri Lankan Tamil Children's Songs. University of Jaffna.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work